1980 பிப்ரவரி 4]

திரு. துரை மூத்துசாமி: * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? முதலில் பேரவையின் கண்ணியத்தைக் காப்பாற்றுங்கள்.

அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்துப் பயணச் சீட்டுகள்.

*வினா எண். 33—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்து பயணச் சீட்டுகளில் அண்ணா உருவப் படத்தை அச்சடிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது எப்போது முதல் செயல்படுத்தப்படும் ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) அண்டு (ஆ) அண்ணா உருவம் பொறிக்கப்பட்ட பயணச்சீட்டுக்களை அண்ணாவின் பிறந்த நாளாகிய 15—9—1979 முதல் அண்ணா போக்குவரத்துக் கழகம் உபயோகித்து வருகிறது.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் இராமநாதபுரம் பிரிவுப் பணியாளர்கள்.

*வினா எண். 34—திரு. த. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் பிரிவில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் 1977 மே மாதத்திலிருந்து 1978 மே மாதம் வரை வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்? ஊர் மாற்றம் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1980 பிப்ரவரி 4

(ஆ) வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களிடமிருந்து முறையீடுகள் ஏதேனும் வந்துள்ளனவா ?

(இ) ஆமெனில் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள் பத்துப் பேர், ஊர் மாற்றம் செய்யப்பட்டவர்கள் பதிமூன்று பேர்.

(ஆ) ஆம்.

(இ) முறையீடுகள் அனுப்பிய பின்னர் திரு. எம். தியாகராஜன் என்ற கண்டக்டரைத் தவிர்த்து மீதமுள்ள ஒன்பது நபர்களும் தொழிற் தாவா எழுப்பி, அது தொழிலாளர் அலுவலர், இராமநாதபுரம் அவர்கள் முனபாக பேச்சுவார்த்தையில் உள்ளது.

திரு. த. இராமசாமி : தலைவரவர்களே, எந்தக் குற்றத்திற்காக அவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

திரு ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவரவர்களே, மேற்கண்ட 10 பேர்களும் பல்வேறு நிர்வாக முறை கேடுகளுக்காகவும், 'எப்.சி. கேஸ்' போன்ற குற்றத்திற்காகவும் வேலையிலிருந்து நீக்கப்பட்டு இருக்கிறார்கள்.

வெலிங்டன் நீர்த் தேக்கம்.

*வினா எண். 35—திரு. மொ. பெரியசாமி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் மங்கலூர் தொகுதியிலுள்ள வெலிங்டன் நீர்த்தேக்கத்தை ஆழப்படுத்தவும் வாய்க்காலை அகலப்படுத்தவும் திட்டம் ஏதும் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது செயல் படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) வெலிங்டன் நீர்த்தேக்கத்தை ஆழப்படுத்தும் திட்டத்திற்குப் பதிலாக வாய்க்காலின் நீர் வரத்தினை அதிகப் படுத்தும் திட்டம் தற்போது தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.